★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam:Nadu" A Tamil Daily. ✠ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: புரட்டாசி 11௳ புதன் (26—9—56) ★ ★ வெளியீடு: புரட்டாசி 12௳ வியாழன் (27—9—56) [இதழ் 92

தபால் மூலம் கல்லூரிப் படிப்பு

844 பேர் எஞ்சினியர் பட்டம் பெற்றனராம்

★

மாஸ்கோவிலுள்ள தபால்மூலம் கல்வி கற்பிக்கும் சோவியத்-யூனியன் பல தொழில் கல்லூரியில், இவ்வாண்டில் மாத்திரம் 844 பேர்வரை எஞ்சினியர் பட்டம் பெற்றுத் தேறியுள்ளனர். இவர்கள் யாவரும் தத்தம் மாமூலான வேலைகளைச் செய்து கொண்டே தபால் மூலம் கல்லூரிக் கல்வியினின்று பட்டம் பெற்றுள்ளனராம்.

'இரண்டாம் முறை சுட்டது நியாயமல்ல'

'அதற்கு எவ்வித அவசியமும் இருக்கவில்லை'

'போலீஸ் அதிகாரியின் தவறான முடிவே அதற்குக் காரணம்'

'தடியடியும் அளவு மீறி தரப்பட்டிருக்கிறது'

அம்பாலா நீதிபதியின் ஆணித்தரமான அறிக்கை

சாந்திகார், செப். 25—

"கால்சா புகைவண்டி நிலையத்தில் போலீஸ் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு அவசியம் இருந்ததா என்ற பிரச்சினைக்கு, இரண்டாவது துப்பாக்கிப் பிரயோகம் நியாயமானது எனக் கொள்ளக் கூடிய சூழ்நிலை இருந்ததாகச் சொல்வதற்கில்லை. ஆனால் முதல் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு நியாயம் இருந்தபோதிலும், அத்துப்பாக்கிப் பிரயோகம் நல்ல கட்டுப்பாட்டுடனும் ஒழுங்கான முறையிலும் செயலாற்றப்பட்டதாகச் சொல்வதற்கில்லை."

"துவக்க நிலையில், தவறிய வழியில் தொழிலாளர் தலைவர்கள் செயலாற்றினர்; ஆனால், போலீஸ் பெரிய அதிகாரியும் மற்ற அதிகாரிகளும் திறமையாகச் செயல்படுத்தினர். துப்பாக்கிப் பிரயோகத்திற்கு முன்புவரை போலீஸ் பெரிய அதிகாரி திறமையாகச் செயலாற்றி வந்தார்; ஆனால், இரண்டு துப்பாக்கிப் பிரயோகக் காலத்திலும் அதே அதிகாரி செவ்வனே செயலாற்றத் தவறி விட்டார்,"

—இவ்வாறு, கால்சா புகைவண்டி நிலையத்தில் தொழிலாளர் மீது நடத்திய துப்பாக்கிப் பிரயோகம் குறித்து உண்மை அறிய நியமிக்கப்பட்ட அம்பாலா நீதிபதி, விசாரணைக்குப் பிறகு தகவல் தந்துள்ளார்

இந்தத் துப்பாக்கிப் பிரயோகம், இரயில்வே போர்டு தலைவர் சி. பாண்டே அவர்கள் அங்கு வந்த பொழுது, தங்கள் கோரிக்கைகளை அவருக்கு உணர்த்தும் வகையில் தொழிலாளர்கள் செய்த ஆர்ப்பாட்டத்தின்போது நடைபெற்றதாகும் "போலீஸ் அதிகாரியின் தவறான முடிவின் மீது இரண்டாவது துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்று இருக்கிறது. எனவே, அந்தத் துப்பாக்கிப் பிரயோகம் நியாயமானது எனச் சொல்வதற்கில்லை."

என்று, தமது அறிக்கையில் நீதிபதி மேலும் தெளிவாக்கி இருக்கிறார்.

"அளவு கடக்காது தடியடி கொடுக்கப்பட்டிருக்கிறது என்பது உண்மையானாலும், அந்த நிலைமையில் தேவைப்படும் அளவைக் காட்டிலும் அதிகமாகத் தடியடி தரப்பட்டிருக்கிறது."

எனவும், அவர் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அளவு மீறிய துப்பாக்கிப் பிரயோகத்திற்குக் காரணமாக இருந்த போலீஸ் அதிகாரியை பஞ்சாப் அரசாங்கம் உடனடியாக வேறு இடத்திற்கு மாற்றி இருக்கிறது.

இவ்விசாரணைக்குழுவை தொழிலாளர்கள் கோரிக்கைக்கிணங்க பஞ்சாப் முதலமைச்சர் சர்தார் பிரதாப் சிங் கெய்ரான் நியமித்தார்.

கே. வி. கே. சாமி படுகொலை

மேலும் விவரங்கள்

(டிரங்க் டெலிபோன் செய்தி)

தி. மு. கழக செயற்குழு உறுப்பினர் கே. வி. கே. சாமி படுகொலை செய்யப்பட்டது சம்பந்தமாக கைது செய்யப்பட்டுள்ள தங்கப்பழம் ரிமாண்டில் வைக்கப்பட்டிருக்கிறார்.

கிடைத்துள்ள தகவல்களின் பேரில், போலீஸ், பலர் மீது சந்தேகம் இருப்பதாக அறிந்து, அவர்கள் குறித்து நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிகிறது.

இன்று வரையில் வேறு யாரும் கைது செய்யப்படவில்லை.

போலீஸ் இன்ஸ்பெக்டர்-ஜெனரல் தூத்துக்குடி வருவதாகக் கூறப்படுகிறது.

போலீஸ் டெப்யுடி இன்ஸ்பெக்டர்-ஜெனரல் ஏற்கனவே வந்திருப்பதாகத் தெரிகிறது.

இப்போது தலைமறைவாக இருக்கும் 6 பேருக்குக் கொலையில் சம்பந்தமிருக்கும் என்று போலீஸ் தகவல் அறிந்து, அவர்களைக் கைது செய்யத் தீவிர முயற்சி எடுத்து வருகிறது.

கொலை செய்யப்பட்ட சமயம் தோழர் சாமியுடனிருந்த நடராசன் போலீஸ் காவலில் வைக்கப்பட்டிருந்ததாகச் சில பத்திரிகைகளில் வந்தசெய்தி தவறு என்று தெரிகிறது.

இன்று பகல் 12-30 மணிக்கு, தூத்துக்குடி நகர தி மு. கழகச் செயலாளர் ஜோசப் டிரங்க் போன் மூலம் தலைமை நிலையத்திற்கு இத்தகவல்களை அறிவித்திருக்கிறார்.

★

கே. கே. நீலமேகம்

அனுதாபம்

ஆந்திராவிலிருந்து இன்று காலை சென்னைவந்த குடந்தை நீலமேகம் அவர்கள், நேரே 'அறிவக'த்திற்கு வந்து அண்ணா அவர்களையும், துணைப்பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்களையும், கருணாநிதி அவர்களையும்சந்தித்துத் தோழர் சாமி அவர்களின் அகால மரணம் குறித்துத் தனது ஆழ்ந்த அனுதாபத்தை அவர்களுடன் பகிர்ந்து கொண்டார்.

பள்ளிகளில் மீண்டும் கட்டாய இந்தி?

சட்டசபைக் குழு சிபாரிசுக்கு ஏற்ப சர்க்கார் முடிவு செய்யுமாம்

"பள்ளிக்கூடங்களில் இந்தி இஷ்டபாடமே; அதில் பரீட்சை எழுதவேண்டும் என்ற கட்டாய மில்லை என்பதைக் கவனிக்கும் போது இந்தி மொழி வளர்ச்சி கணிசமானது என்றே கூற வேண்டும்"

என்று, கல்வி அமைச்சர் சுப்பிரமணியம் சென்னை சட்டசபையில கூறியுள்ளார்.

"பள்ளிகளில் இன்று இந்தி விருப்பப் பாடமாக இருப்பதால் மாணவர்கள் இந்தி கற்பதில் அதிக அக்கரை காட்டுவதில்லை; எதிர்காலத்தில் இந்தி அறிவின் முக்கியத்தைக் கருதியும், மாணவர்களின் நல்வாழ்வை உத்தேசித்தும் இந்நிலையை சென்னை சர்க்கார் கட்டாய பாடமாக்குமா?" என்று, கே. அரங்கநாதன் என்ற உறுப்பினர் கேள்வி எழுப்பினர்.

"இதைப்பற்றி சட்டசபைக்குழு ஆலோசித்துத் தற்காலிக முடிவு கூறியிருக்கிறது; அதைக் கவனித்து அரசாங்கம் முடிவு செய்யும்" என்று, அமைச்சர் பதிலளித்தார்.

புதிய மாநிலம் உருவான பின்னர்!

'சென்னைக்குக் கோதாவரி தண்ணீர் கொண்டுவரத் திட்டம்'

கர்னூல், செப். 25—

"கோதாவரி தண்ணீரைக் கிருஷ்ணா, பெண்ணாறுக்கும், அங்கிருந்து சென்னைக்கும் கொண்டு செல்லும் திட்டத்தைப் புதிய மாநில அமைப்பு உருவான பின்னர், சென்னை—ஆந்திர எஞ்சினீயர்கள் கூட்டாக ஆலோசித்து முடிவு செய்வார்கள்"

என்று, ஆந்திர சட்டசபையில் உதவி முதல் மந்திரி சஞ்சீவி ரெட்டி கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவில் இரும்புக் கனி உற்பத்தி 1956 ஜூன் மாதத்தில் 2,91,650 டன்னாக இருந்தது—ஜூலை மாதத்தில் 8,25,860 டன்னுக்கு உயர்ந்து விட்டது.

வடக்கெல்லைக் கிளர்ச்சி:

ம. பொ. சி. கைதானர்

4 பிரிவினராக மறியலில் ஈடுபட்ட 60 தோழர்களும் கைது

சென்னை, செப். 26—

கடந்த இரு தினங்களாக சென்னை சட்ட சபை அருகில் நடைபெறும் வடக்கு எல்லை மீட்புக் கிளர்ச்சி இன்று மூன்றாவது நாளாக நடைபெற்றபோது, தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சிவஞானம் கைது செய்யப்பட்டார்.

ஏற்கனவே அறிவித்திருந்தபடி, பண்டித நேருவின் உறுதி மொழிக் கடிதத்தை கொளுத்துவதைக் நிறுத்திக் கொண்டார்.

இன்று காலை 9-30 மணி அளவில் மறியல் துவங்கிற்று.

திருவல்லிக்கேணி நெடுஞ்சாலையின் இரு மருங்கிலும் ஏராளமான மக்கள் குழுமியிருந்தனர்.

பலத்த போலீஸ் பாதுகாவல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தோழர் கே. பாலசுப்பிரமணியம் (வங்கனூர்) தலைமையில் முதல் பிரிவினர் மறியலில் ஈடுபட்டனர்; அவர்கள் அனைவரும் கைதாயினர்.

பின்னர், பத்து நிமிட இடைவெளிகளில் தோழர்கள் என். கே. சோமசுந்தரம் (இராமகிருஷ்ணா பேட்டை), பகவத் சிங் (பெத்துநாயக்கன்பேட்டை), ம. பொ. சி. ஆகியோரின் தலைமையில் முறையே இரண்டு, மூன்று, நான்காம் பிரிவினர் மறியலில் ஈடுபட்டனர்.

திரு. ம. பொ. சி. உட்பட மொத்தம் 60 பேர்கள் கைது செய்யப்பட்டனர்.

மறியல் அமைதியாகவே நடைபெற்றது. எவ்வித அசம்பாவிதங்களும் நிகழவில்லை.

இந்தத் தகவலை தமிழரசுக் கழகக் கவிஞர் கா. மு. ஷெரீப் அறிவிக்கிறார்.

மேற்கு வங்கத்தில் 10 இலட்சம் பேர் பொது வேலைநிறுத்தம்

விலைவாசி உயர்வுக்குக் கண்டனம்

கல்கத்தா, செப். 25—

உணவு, உடை போன்ற மிக முக்கியமான பொருள்களின் விலை உயர்வைக் கண்டித்து, ஆலைத் தொழிலாளர்களும், நடுத்தர வகுப்பு ஊழியரும் சுமார் 10-இலட்சம் பேர் மேற்கு வங்கத்தில் ஒருநாள் அடையாள வேலை நிறுத்தம் செய்தனர்.

வர்த்தக நிலையங்கள், மார்க்கெட்டுகள் மூடப்பட்டுக் கிடந்தன வென்றும், பஸ்களும், டிராம்களும் அறவே நின்றுவிட்டன வென்றும், தெருக்களில் நடமாட்டமே இல்லையென்றும் செய்திகள் கூறுகின்றன.

சில்டா—ஹௌரா இரயில்நிலையங்களில் ஆர்ப்பாட்டக்காரர்கள் இரயில் பாதையில் உட்கார்ந்துக்கொண்டு இரயில்கள் செல்லவொட்டாமல் தடை செய்தனராம்; ராணுகட் பகுதியில் இரயில்கள் நிறுத்தப்பட்டனவாம்!

துறைமுகத்தில் ஏற்றுமதி இறக்குமதி நடைபெறவில்லையாம்! மாணவர்கள் பள்ளிகளுக்கும், கல்லூரிகளுக்கும் செல்லவில்லையாம்! சினிமாக் காட்சிகள் நடைபெறவில்லையாம்! ஆலைகளெல்லாம் மூடிக்கிடந்தனவாம்!

இந்த வேலை நிறுத்த ஏற்பாட்டை இடதுசாரிக் கட்சிகளும் அதைச் சார்ந்த நிறுவனங்களும் ஏற்பாடு செய்தனவாம்.

இதைப் பயன்படுத்திக்கொண்டு சிலர் தவறான செயல்களில் ஈடுபடக்கூடுமென முன்னெச்சரிக்கையாக 300 பேரையும், வேலை நிறுத்தத்தின்போது 600 பேரையும் போலீஸ் கைது செய்ததாம்.

நகர முழுவதும் வேலை நிறுத்தம் அமைதியாகவும், கட்டுப்பாடுடனும் நடைபெற்றுள்ளது குறிப்பிடத் தக்கது.

இது, இந்த ஆண்டில் மேற்கு வங்கத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட நான்காவது வேலை நிறுத்தமாகும்.

அடையாள வேலை நிறுத்தம் ஒத்திவைப்பு

சென்னை, செப். 26—

தொழிலாளர் — அரசாங்க இன்ஷ்யூரன்ஸ் திட்டம் அமல் நடத்தப்படும் விதத்தைக் கண்டித்து, நகர தொழிற்சங்கக் கவுன்சில் ஆதரவில் இன்று நடைபெறவிருந்த அடையாள வேலை நிறுத்தம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று நகர தொழிற் சங்கக் குழு அறிவித்துள்ளது.

நம் நாடு

சென்னை 26—9—'56 புதன்

முதல் திட்டத்தின் அவலட்சணம்!

மக்கள் நல்வாழ்வில் அக்கறை, அதற்கான திட்டம் திட்டக்கூடிய நுண்ணறிவு, அதை ஒழுங்காகவும் வெற்றிகரமாகவும நிறைவேற்றக்கூடிய பேராற்றல் ஆகிய பண்புகள் அனைத்தும் தங்களைத்தவிர வேறு எவருக்கும் இருக்கவில்லை என்பது, காங்கிரஸ் கட்சியினரின் உள்ளக்கிடக்கை. அதுமட்டுமன்றி, கோலோச்சும் உரிமையும் தங்களின் பிறப்புரிமை என்று திடமாக எண்ணிக்கிடப்பவர் காங்கிரஸ் கட்சியினரேயாவர்.

இத்தகு மனேபாவம் ஒரு நாட்டின் ஆளும் கட்சியினருக்கு இருந்துவருவது, எதிர்காலத்தில் அந்த நாட்டு மக்களுக்குப் பேராபத்தாகவே முடிந்துவிடும். அத்தகு ஆளுவோரைக் கொண்ட நாடு, எதிர்காலத்தில் பற்பலவிதமான பரிகரிக்க முடியாதத் துன்பங்களுக்குப் பலியாகிவிடும் என்பது வரலாறு கண்ட உண்மையாகும்.

இந்தியத் துணைக்கண்டத்தை காங்கிரஸ் ஆளவந்தார்கள் அத்தகைய அழிவுக்குத்தான் வேகமாக விரட்டிச்சென்று கொண்டிருக்கிறார்கள். அவ்வழியை இடைமறித்து, வரவிருக்கும் பேராபத்தினின்று பொதுவாக இந்தியத் துணைக்கண்டத்தையும், குறிப்பாக நம்மரும் தென்னாட்டையும், அதிலும் குறிப்பாக நமது தமிழ்த் தாயகத்தையும், பாதுகாக்க வேண்டிய பொறுப்பான ஜனநாயகக் கடமை நமது கழகத்திற்கு இருந்துவருகிறது எனக் கூறுவது மிகையாகாது.

மக்கள் நல்வாழ்வில் அக்கரை கொண்டிருப்பதில் தங்களுக்கு நிகர் தாங்களே எனக் காங்கிரஸ் கட்சியினர் நம்பியிருப்பது உண்மையாக இருக்க வேண்டுமானல், அக்கட்சிக்குள் பதவிப் போராட்டத்திற்குத் துளியும் இடமில்லாது இருக்க வேண்டும். அக்கட்சிக்குள் இன்று நாட்டு மக்கள் எதனைக் கண்டு வருகிறார்கள்?

கட்சித் தலைமைக்குப் போட்டி, சட்டசபை கட்சித் தலைமைக்குப் போராட்டம், அமைச்சர் பதவிக்கு மடிபிடி சண்டை, ஒருவரை ஒருவர் வீழ்த்தச் சதி, ஒருவரை ஒருவர் வீழ்த்தி வெற்றி காண ஒழுக்கக் கேடான செயல்கள் ஆகிய பணியாற்றும் பண்பற்ற, உழைக்கும் உள்ளமில்லாத, பதவிக்கும் அதிகாரத்திற்கும் கடும் போர் புரியும் கொலைக் களமாகவே இன்றையக் காங்கிரஸ் கூடாரம் இருந்து வருகிறது என்பதை எவரால் மறுக்க முடியும்? இத்தகைய அதிகார வெறியின்பிறப்பிடமாக இருந்து வரும் தங்கள் கட்சியினருக்கா, நாட்டு மக்களின் நல்வாழ்விற்கு உத்தரவாதம் தர முடியும் என காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் கூறிவருவது வேதனை தரும் விசித்திரமேயாகும்.

மக்களின் நல்வாழ்வைத் தேடித் தருவதற்கான தக்க திட்டங்களைத் தீட்டுவதிலும், அவைகளை ஒழுங்காகவும் திறமையாகவும் வெற்றிகரமாகச் செயலாற்றுவதிலும் தங்களை ஒப்பார் வேறு எவரும் இல்லை எனக் காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் இறுமாந்து கிடக்கின்றனர். நடைமுறை, இவ்விறுமாப்பை எந்த அளவு மெய்யாக்குகிறது என்பதும் ஆராய்ந்து அறியத்தக்கதாகும்.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் மூல உணவுப் பொருள் உற்பத்திக்கு முதலிடம் கொடுக்கப்பட்டிருந்தது. அதாவது, உணவுத் துறையில் இந்தியத் துணைக்கண்டத்தைத் தன்னிறைவு கொண்டதாக மாற்றி அமைப்பது என்பதே முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் குறிக்கோளாகும்.

மரம் நடு விழாவிலிருந்து கரம்புகளை நஞ்சை நிலங்களாகத் திருத்தி அமைக்கும் வரையில், தேவைப்படும் செயல் முறைகள் அனைத்தும் முதல் திட்டத்தில் இடம் பெற்றிருந்தன. திட்டம் கணிசமாக வெற்றி பெற்றுவிட்டது; உணவுப் பற்றுக் குறை தொல்லையிலிருந்து இந்தியத் துணைக் கண்டம் மீட்சியுற்றுவிட்டது; உணவுப் பொருட்களை பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் தகுதியையும் இப்பாரத் அடைந்துவிட்டதுஎன்று, காங்கிரஸ் ஆளவந்தார்கள் கர்சித்து வந்தனர்.

அந்த வீர கர்ச்சனை வெறும் ஊளையாக மாறிவிடுவதற்கு அதிக நாட்கள் தேவைப்படவில்லை. முதல் திட்டக்கால இறுதிக்குள்ளாகவே அமெரிக்காவிலிருந்து உணவுத் தானியத்தை முன்னைக்காட்டிலும் பெருந்தொகைக்கு இறக்குமதி செய்யவும், உணவு உற்பத்தி ஒவ்வொரு ஆண்டும் கணிசமாகக் குறைந்து வந்திருக்கிறது என பொறுப்புள்ள டில்லி அமைச்சரே புள்ளிவிவரம் காட்டி கண்ணைப் பிசையவுமான சோகக் காட்சிகளை மக்கள் கண்டுதான் வருகின்றனர்.

முதல் ஐந்தாண்டுத் திட்டம், உணவு உற்பத்தித் துறையில் தான் இத்தகைய அவலட்சண ரீதியில் நூற்றுக்குநூறு வெற்றி கண்டு இருக்கிறது என்பதில்லை. முதல் திட்டம், தொழில் துறையில் பெற்றுள்ள வெற்றி, உணவுத் துறைக்குக் கிடைத்துள்ள அவலட்சணத்திலும் பல மடங்கு அவலட்சணம் கொண்டதாகும்.

திட்டம் செயல்பட்டு வரும் மூன்றாண்டுக் காலம் வரை, புதிய தொழில் ஏற்பாடுகளால் நாட்டில இருந்துவரும் வேலையின்மை பெரிய அளவில் குறைந்துவிடப் போகிறது என, கோபுரத்தின் மீதிருந்து கொக்கரித்து வந்தனர் காங்கிரஸ் ஆளவந்தார்கள். அந்தோ! மூன்றாண்டுகளுக்குப் பிறகு, மூன்றாண்டுகடகு முன்பு நாட்டில் இருந்துவந்ததைவிடவேலையில்லாது தவிப்போர் எண்ணிக்கை பெருகி இருப்பதை, முதல் முதலாகக் காணத் தொடங்கினர் ஆளவந்தார்கள். நிலைமையைத் தெரிந்துகொண்டதும், பெரும் பூனையைக் கண்டதும் கீச் கீச்செனக் கதறி அழும் கிளியைப்போல், ஆளவந்தார்கள் அழுகுரல் எழுப்பினர் அல்லது அசடு வழிய வாயடைத்துப்போயினர்.

காங்கிரஸ் ஆளவந்தார்கள் திட்டம் தீட்டும் நுண்ணறிவிற்கும், அதனைச் செய்து முடிக்கும் செயல் திறத்துக்கும் மக்களுக்கு நல்வாழ்வைத் தேடித் தர அவர்களுக்குள்ள பேராற்றலுக்கும், முதல் ஐந்தாண்டுத் திட்ட சாதனைகளில் கலந்து இருக்கும் அலங்கோலம், ஒரு அத்தாட்சிப் பத்திரமாகும்.

காங்கிரஸ் ஆளவந்தார்களின் நிர்வாகத்தில் நிரம்பியுள்ள ஊழல்களையும், வீண் பணச் செலவையும் குறித்து எதுவும் பேசாமல் இருப்பதே நல்லது.

முதல் திட்டத்தின் அவலட்சணத்தை நாட்டு மக்கள் நன்கு தெரிந்துகொண்ட பிறகும்கூட, திட்டம்தீட்ட நமது கழகத்தாருக்குத் தெரியுமா என நிதி அமைச்சர் சுப்பிரமணியம் கேட்கக் கிளம்புவது, தரம் குறைந்த நகைச்சுவைக்கு ஓர் எடுத்துக் காட்டாகும்.

நிலத்தை உழுபவன் நிலை கேளீர்!

சென்னை, செப். 24—

'நிலத்தை உழுபவன் யார்?' என்று, சென்னை சட்டசபையில் எழுப்பப்பட்ட பிரச்சினை குறித்து அமைச்சர் மாணிக்கவேலர் விளக்கம் தருகையில் குறிப்பிட்டதாவது:—

"நிலத்தை உழுபவன், தலையில் தொப்பியோ, தலைப்பாகையோ அணிந்திருக்கமாட்டான்; அவன் மேல் சட்டை (கோட்) போட்டிருக்கமாட்டான்; அவன் கந்தல் துணியை உடுத்திக்கொண்டு, உழவையே நம்பி வாழ்க்கை நடத்தி வருவான். தன்னுடைய நெற்றியில் துளிர்க்கும் வியர்வைத் துளிகள் நிலத்தில் சிந்த வேலை செய்து பிழைப்பவன். அவனுடைய எதிரி யார் என்றால், தலையில் பாகை அணிந்து, உடம்பில் மேலாடையோ, 'கோட்'டோ அணிந்துகொண்டு, நிழலில் உட்கார்ந்துகொண்டு சாப்பிட்டுக் கொண்டிருப்பவன்தான்!"

உடனே அல்லாபிச்சை என்ற உறுப்பினர் எழுந்து, "அப்படியானல் 'கோட்' அணிந்துகொள்வது குற்றமா?" என்று வினவ, அமைச்சர், 'இல்லை—நீண்ட அங்கிகூடப் போட்டுக்கொள்வதில் தவறில்லை' என்று அவரைப்பார்த்துக் கூறினராம்!

இந்தியப் பீடிகளுக்கு இலங்கையில் தடை?

கொழும்பு, செப். 24—

இலங்கையில் உள்நாட்டு தொழிலாளருக்கு ஆதரவு தரவும், வேலை வாய்ப்புகளை அதிகரிப்பதற்கும், இந்தியாவிலிருந்து பீடி இறக்குமதி செய்வதற்குத் தடைவிதிக்க வேண்டும் என்று அமைச்சரவை உப-குழு சிபாரிசு செய்துள்ளதாம்.

இப்போது இலங்கை தனக்குத் தேவையான பீடியை இந்தியாவிலிருந்துதான் வாங்குகிறது.

டோகியோ, செப். 25—

ஏழு அடி இரண்டு அங்குலம் உயரமுள்ள ஒரு மனிதரை ஜப்பானிய ஆராய்ச்சியாளர்கள் ஒரு மலைச்சாரலிலிருந்து நாகோனு என்னும் இடத்திற்குக் கொண்டு வந்துள்ளனர்.

'சத்தியமங்கலத்தில் உயர்ந்த ரக இரும்புக் கனி கிடைக்கிறது!'

ஆலை அதிபர்கள் பயன்படுத்த முன்வந்தால் சர்க்காரின் இடையூறு இராதாம்!

கோவை, செப். 22—

"சத்தியமங்கலத்தில் கிடைக்கும் இரும்புக் கனி மிகவும் உயர் தரமான ரகத்தைச் சேர்ந்ததாகும். அக்கனிகள் அங்கு பெரும் அளவிலும் கிடைக்கப் பெறுகிறது எனவே, அங்கு கிடைக்கிற இரும்புக் கனிப் பொருட்களைக் கொண்டு தேனிரும்பு தயாரிப்பதற்கு, இங்குள்ள எஞ்சினீயரிங் தொழிற்சாலைகள் நடவடிக்கை எடுக்கலாம்.

"இங்கு, தேவையான தொழிற்சாலைகள் அமைக்க முன்வரும் தொழில் அதிபர்களுக்கு சர்க்கார் எந்தவித உதவியையும் நிச்சயமாக அளிக்கும். இயற்கையின் விளைவாக ஏற்படும் மின்சாரப் பற்றுக்குறையைச் சரி செய்ய அவசியமான 'தெர்மல்' நிலையத்தை ஏற்படுத்த ஆலை அதிபர்கள் விரும்பினுல், அது குறித்தத் திட்டங்கள் அனைத்தும் பரிசீலிக்கப்படும்,"

என்று, மத்திய கனரகத் தொழில் மந்திரி எம். எம். ஷா, கோவையில் ஆலை அதிபர்களுடன் நடத்தின விவாதத்தின்போது அவர்களுக்கு உறுதி கூறியிருப்பதாகக் கூறப்படுகிறது.

'ஸ்டேபிள் பைபர் ரேயான்' உற்பத்தித் தொழிற்சாலை ஒன்றை அங்கு ஆரம்பிப்பதற்கு அங்கு நல்ல வசதிகள் இருப்பதாகவும், எனவே அதற்குத் தேவைப்படும் லைசென்சு மற்றும் உதவிகள் அனைத்தும் கிடைக்க மாநில சர்க்காரிடமிருந்தோ, மத்திய சர்க்காரிடமிருந்தோ எவ்வித இடையூறுகளும் ஏற்படாதென்றும் கூறிய அவர், மேலும், அங்குள்ள தொழிலதிபர்கள், மரக்கூழ், காகித உற்பத்தி போன்ற தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதில் அதிக அக்கரை காட்டவேண்டுமென்றும் கருத்தறிவித்திருக்கிறார்.

சோஷலிச சமுதாயத்தில் பாரபட்ச நிலைமை ஏன்?

பண்டித நேருவிடம் உழவர் குழு கேள்வி

புதுடில்லி, செப். 24—

30 ஏக்கராவுக்கு மேல் நிலம் வைத்துக்கொள்ளக்கூடாது என்று வரம்பு கட்டுவதை எதிர்த்து பெப்சுவைச் சேர்ந்த எட்டு விவசாயிகள் கொண்ட தூதுக்குழு ஒன்று பண்டித நேருவைச் சந்தித்து, குறிப்பு ஒன்று தந்துள்ளதாம்.

நகரத்தில் உள்ளவர்கள் இலட்சக்கணக்கில் சம்பாதிப்பதற்கு அனுமதிக்கப்படும்போது, கிராம மக்களுக்கு மட்டும் 30 ஏக்கரா நிலத்திற்கு மேல் (விலை மதிப்பு ரூ. 6,000) இருக்கக் கூடாதென்று தடுப்பது பாரபட்சம் காட்டுவதாக இருக்கிறது என்று அக்குழுவினர் குறிப்பிட்டுள்ளனராம்.

சோஷலிச சமுதாயத்தில் இதை எப்படி அனுமதிக்கலாம் என்றும் அவர்கள் கேட்டுள்ளனராம்.

துணி பதுக்கலைத் தடுப்பதற்கு இந்திய சர்க்கார் நடவடிக்கை

விலை உயரக்கூடுமென கவலையாம்

புதுடில்லி, செப். 24—

சமீபத்தில் துணிகளுக்குத் 'தீர்வை' உயர்த்தப்பட்டிருப்பதையொட்டித் துணிகள் பதுக்கப்படலாம் என்றும், இதனல் துணிக்குப் பஞ்சம் ஏற்பட்டிருப்பது போன்ற ஒரு நிலைமை ஏற்பட்டு விலைகள் உயரக்கூடும் என்றும் கருதி முன்னெச்சரிக்கையாக இந்திய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது

பஞ்சாலைகள் உற்பத்தி செய்யும துணிகளில் சராசரி ஒரு மாத உற்பத்திக்கு மேல் கையிருப்பில் வைத்துக் கொள்ளக்கூடாது என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

துணி பதுக்கலைத் தடுக்கவே இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக வர்த்தக—கைத்தொழில் இலாகா அறிக்கையொன்று கூறுகிறது.

ரூ. 9 லட்சம் செலவில்!

ஆரணி ஆற்றில் பெரிய பாலம்

ஆரணி, செப். 24—

சமண்டலாக நதியில் அடிக்கடி வெள்ளம் ஏற்படுவதால் போக்கு-வரத்திற்குத்தடை ஏற்படுகிறது; எனவே ஆரணி ஆற்றில் ரூ. 9 இலட்சம் செலவில் ஒரு பாலத்தைக் கட்டுவதற்கு எஞ்சினீயர்கள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்கள் எனத் தெரியவருகிறது.

விஞ்ஞான மேதை இயற்கை எய்தினர்

பிரைட்டன், செப் 24—

'ஐசடோப்'பைக் கண்டுபிடித்து, 1921-ல் இரசாயனத் துறையில் நோபல் பரிசு பெற்ற சிறந்த விஞ்ஞானியான பிரெடரிக் சோடி என்பார், தமது 79-வது வயதில் இங்கு இயற்கையெய்தினர் என்று அறிவிக்கப்படுகிறது.

ஒரு மைல் உயரமுள்ள கட்டிடம் உருவாகும்!

நியூயார்க், செப். 24—

உலகிலேயே மிக உயரமானது எம்பயர் எஸ்டேட் கட்டிடமாகும். இதைவிட 4 மடங்கு உயரத்திற்கு சிகாகோவில் ஏரிக்கரை அருகே ஒரு கட்டிடத்தைக் கட்டுவதற்கு பிராங் லாய்ட் ரைட் என்ற அமெரிக்கக் கட்டிட நிபுணர் திட்டமிட்டிருக்கிறாராம்; இக்கட்டிடம் 1 மைல் உயரமுள்ளதாக இருக்குமாம்!

குளிர் சாதனத்துடன் புதிய கட்டிடமாம்!

புதுடில்லி, செப். 24—

சென்னையில் உள்ள தென்பகுதி இரயில்வே காரியாலயத்திற்காகக் குளிர் சாதன வசதிகொண்ட பல மாடி கட்டிடம் ஒன்று கட்டுவதற்கு மதிப்பீடுகள் தயாரித்து வருவதாகவும், இக்கட்டிட வேலைகள் இந்த நிதி ஆண்டிலேயே ஆரம்பிக்கப்படலாம் என்றும் தெரியவருகிறது.

மறைந்த மாவீரன் கே. வி. கே. சாமிக்கு தோழர்களின் இறுதி மரியாதை

நாடெங்கிலுமுள்ள நமது கழகத் தோழர்களும் அனுதாபிகளும் தோழர் கே. வி. கே. சாமி அவர்கள் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து நிறைவேற்றிய தீர்மானங்கள் முதலியன இங்கு சுருக்கித்தரப் பட்டுள்ளன :—

சென்னை :

42-வது வட்ட தி. மு. க.

தோழர் கே. வி. கே சாமி படுகொலை செய்யப்பட்ட சேதி அறிந்ததும், கழகப் பணிமனையில் பறந்துகொண்டிருந்த கொடி தாழ இறக்கிப் பறக்கவிடப்பட்டது. வட்டத்தின் பல பகுதிகளில் கருப்புக் கொடி ஏற்றப்பட்டது. தோழர்கள் கருப்புச் சின்னம் அணிந்து கழக அறையில் கூடினர். 21-9-56 மாலை 6½மணிக்கு தோழர் ஏ.கே. நடராசன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. தோழர் நீல. நாராயணன் சொற்பொழிவாற்றினர். அனுதாபத் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

41-வது வட்ட தி. மு. க.

21—9—56 மாலை நடைபெற இருந்த திராவிட நாடு பிரிவினை நாள் விழா, அனுதாபக் கூட்டமாக நடத்தப்பட்டது. தோழியர் அலமேலு-அப்பாதுரை தலைமையில் தோழர் சோ. இளவரசு சொற்பொழிவாற்றினர். வட்டத்தில் பறந்துகொண்டிருந்த கழகக் கொடி பாதிக் கம்பத்தில் பறக்கவிடப்பட்டது. கூட்டத்தில் அனுதாபம் தெரிவித்துக்கொள்ளும் வகையில் ஒரு நிமிட நேரம் மவுனம் மேற்கொள்ளப்பட்டது.

30-வது வட்ட தி. மு. க.

23—9—56 காலை 10 மணியளவில் கழகப் பணிமனையில், தோழர் மா. சு மணியம் தலைமையில் நடைபெற்ற, திராவிட நாடு பிரிவினை நாள் கூட்டத்தில், தோழர்கள் பலர் பேசினபின், அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

46-வது வட்ட தி. மு. க.

23—9—56 காலை 11 மணியளவில் தோழர் தே ஏழுமலை தலைமையில் நடைபெற்ற திராவிட நாடு பிரிவினை நாள் கூட்டத்தில் தோழர்கள் பலர் பேசினர். அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

4-வது வட்ட இளைஞர் முன்னேற்ற மன்றம்

23—9—56 மாலை 2½ மணிக்கு, தோழர் கே. எஸ். அருணாசலம் தலைமையில் ஊர்வலம் நடைபெற்றது. அனுதாபம் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, 2 நிமிடநேரம் மவுனம் மேற்கொள்ளப்பட்டது.

7-வது வட்டம் அழகிரி மன்றம்

23—9—56 பகல் 2 மணிக்கு தோழர் துரை-செல்வராசன் தலைமையில் மூலக்கொத்தளம் அழகிரி மன்றச் சார்பில் அனுதாபக் கூட்டம் நடைபெற்றது. பல தோழர்கள் சொற்பொழிவாற்றினர். அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சேப்பாக்கம் டாக்டர் சி. நடேசன் மன்றம்

தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

சூளை ஊ. பு. அ. சவுந்திர பாண்டியனுர் நினைவுப் படிப்பகம்

21—9—56ல் நடைபெற இருந்த படிப்பக 3-ம் ஆண்டு விழாவும், திராவிட நாடு பிரிவினை நாள் விழாவும் மாற்றப்பட்டு, அனுதாபக் கூட்டம் நடைபெற்றது. தோழர் ஏ. கே. வில்வம், தோழியர் அருண்மொழி ஆகியோர் பேசினர். அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

காசிமாநகர் மீனவர் கழகம்

சென்னை—இராயபுரம் சூரிய நாராயணச் செட்டித் தெருவில் உள்ள மேற்படி கழகத் தோழர்கள் மீனவர் ஐக்கிய முன்னணியின் சார்பில் ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்திருக்கின்றனர்.

வண்ணை இளங்கோ கலை மன்றம்

23—9—56ல், தோழர் மூர்த்தி தலைமையில் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர். அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஆவடி தி. மு. க. :

23—9—56 மாலை 6 மணிக்கு நடைபெற்ற செயற் குழுக் கூட்டத்தில் அனுதாபம் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

திருச்சி :

22—9—56ல், நகரில் பறக்கவிடப்பட்டிருந்த எல்லா கழகக் கொடிகளும் பாதிக் கம்பத்தில் பறக்கவிடப்பட்டன. 23-ந் தேதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கொடியேற்று விழா நிறுத்தப்பட்டது. அன்று மாலை 5 மணிக்கு பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் தலைமையில் மெயின்காட் கேட்டிலிருந்து மாபெரும் ஊர்வலம் நடைபெற்றது. ஊர்வலத்தில் தோழர் கே வி. கே. சாமியின் படம் அலங்கரிக்கப்பட்டு எடுத்துச் செல்லப்பட்டது. கருப்புக் கொடிகள் ஏந்தித் தோழர்கள் ஊர்வலத்தில் கலந்துகொண்டனர். டவுன் ஆல் மண்டபத்தில் தோழர் அம்பில் தர்மலிங்கம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் பலரும் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும் உருக்கமான சொற்பொழிவு நிகழ்த்தினர். தோழர் சாமியின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

காஞ்சீபுரம் :

23—9—56 மாலை 6 மணிக்கு. பெரிய காஞ்சீபுரம் தேரடி வீதியில், தோழர் இரா. வெங்கடேசன் தலைமையில் திராவிட நாடு பிரிவினை விழா நடைபெற்றது. தோழர்கள் கோவிந்தசமி எம். எல். ஏ., காஞ்சி-கல்யாணசுந்தரம், எஸ். முருகேசன், எதுராசன் ஆகியோர் பேசினர். தோழர் சாமி அவர்களின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

திருக்கழுக்குன்றம் :

22—9—56-ல், செய்தி அறிந்த கழகத் தோழர்களும், நகர மக்களும் துடித்தனர். கிளைக் கழகத்தில் பறந்துகொண்டிருந்த கொடி தாழப் பறக்கவிடப்பட்டது. தோழர்கள் அனைவரும் கருப்புச் சின்னம் அணிந்து அமைதியான ஊர்வலம் சென்றனர். கூட்டத்தில் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அய்யம்பேட்டை :

அய்யம்பேட்டை நகரில் பறந்து கொண்டிருந்த தி. மு. கழகக் கொடிகள் அனைத்தும் தாழப் பறக்கவிடப்பட்டு இறுதி மரியாதையும், அனுதாபமும் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

அருப்புக்கோட்டை :

23—9—56 மாலை 5 மணி அளவில் திருநகரம் தி. மு. கழகப் பணி மனையிலிருந்து ஊர்வலம் புறப்பட்டது. தோழர் சாமி அவர்களின் உருவப் படம் அலங்கரிக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்த சைக்கின் ஊர்வலத்தின் நடுவே கொண்டு வரப்பட்டது. பாண்டியன் திடலை அடைந்ததும் தோழர் சிவசண்முகசுந்தரம் தலைமையில் அனுதாபக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் பலர் பேசினர். அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

திருப்பூர் :

23—9—56 மாலை 4 மணிக்கு, 'டிராவலர்ஸ் பங்களா'வில், தோழர் மு. முத்துரத்தினம் தலைமையில் நகர் கழக அவசரச் செற்குழு கூடியது. 2 நிமிட நேரம் மவுனம் மேற்கொண்டதுடன், அனுதாபத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

ஆத்தூர்—முல்லைவாடி:

ஆத்தூர், முல்லைவாடி கிளைக் கழகங்களில் பறந்துகொண்டிருந்த கழகக் கொடிகள் தாழ இறக்கி விடப்பட்டன. கிளைக்கழகத் தோழர்கள் சார்பில் ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

வேலூர் :

கே. வி. கே. சாமி மன்றம் அமைப்பு—அனுதாபம்

தோழர் கே. வி கே சாமி அவர்களின் மறைவையொட்டி, வேலூர் கலால் வள்ளுவர் தெருவில், 23-9-56 பகல் 2 மணியளவில் கே. வி. கே. சாமி மன்ற அமைப்புக்கூட்டம் நடைபெற்றது. நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அண்ணாமலை நகர் :

தி. மு. கழக மாணவர் கிளை :

22-9-56 மாலை தோழர் கணபதி இராமசுப்பையா தலைமையில், திருவோட்கனத்தில் நடைபெற்றது. தோழர்கள் செங்குட்டுவன் மயிலேறு ஆகியோர் சொற்பொழிவாற்றினர். மாணவர் கிளைச் சார்பில் ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

விழுப்புரம் :

23-9-56 மாலை 6 மணிக்கு, தி. மு. கழகப் பணிமனையில் தோழர் சு. முத்துராமன் தலைமையில் அவசரச் செயற் குழுக்கூட்டம் நடைபெற்றது. ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தருமபுரி:

23-9-56 காலை 9-மணியளவில். தருமபுரி முசாபரி பங்களாவிலிருந்து அனுதாப ஊர்வலம் புறப்பட்டுத் தீர்த்தகிரியார் திடலை அடைந்ததும், அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இரங்கனுதம்பேட்டை:

கரூர் வட்டம் இரங்கனுதம்பேட்டை 'அறிஞர் நூல்நிலையத்'தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

ஏரல் (நெல்லை மாவட்டம்)

21-9-56 இரவு 6-30 மணிக்கு மணிக்கூண்டு அருகில், இரா. பாலரசு தலைமையில் கூட்டம் நடைபெற்றது. தோழர் இரா. அறவேந்தன் சொற்பொழிவாற்றினர். அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மணப்பாறை :

மணப்பாறை நகரில் பறந்துகொண்டிருந்த கழகக் கொடிகள் அனைத்தும் தாழப் பறக்கவிடப்பட்டு அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

மீஞ்சூர் :

கழகக் கொடி தாழப் பறக்கவிடப்பட்டது. நகரிலுள்ள கடைகள் அனைத்தையும் பகல் 10 மணி முதல் 1 மணிவரை அடைத்து, வியாபாரிகள் அனைவரும் தங்கள் அனுதாபத்தைத் தெரிவித்தனர். கழகத் தோழர்கள் ஒன்று நிரண்டு மவுனம் மேற்கொண்டு அனுதாபம் தெரிவித்தனர்.

கீழ்பெண்ணுத்தூர் :

கழகப் பணிமனையில் பறந்துகொண்டிருந்த கழகக் கொடி தாழப் பறக்கவிடப்பட்டு அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் வெற்றி பெறுமா?

பணம்தேடும் படலம் ஆரம்பமாகிறது

வரி விதிப்பையும் — சேமிப்பையுமே பெரிதும் நம்பியிருக்கின்றனராம் !

புதுடில்லி, செப். 25—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தைக் குறித்தும், அதன் பல்வேறு திட்டங்களின் வெற்றிக்கும் தேவையான பணவசதியைக் குறித்தும் மீண்டும் ஆலோசனை செய்யப்பட்டிருக்கிறது

பல்வேறு வரிகளின் மூலமும், சேமிப்பு மூலமும் அரசாங்கத்திற்குக் கிடைக்கும் பணத்தைக் கொண்டு பற்றுக்குறையைச் சமாளித்துவிடலாம என்ற நம்பிக்கை பிறந்திருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது.

பொருட்களின் விலைமீது கட்டுப்பாடு விதிக்கும் நோக்கத்துடன் பிரயோகிக்கப்பட்ட 'வரி ஆயுதத்தின் திறமையை—சக்தியை, அண்மையில் ஏற்பட்டிருக்கின்ற பொருட்களின் விலைவாசிகள் எடுத்துக் காட்டியுள்ளனவாம் !

அண்மையில் மத்திய—மாநில சர்க்கார்கள் எழுப்பின கடன் தொகை பிரச்சினையில் கிடைத்துள்ள வெற்றி, திட்டத்தில் குறிப்பிட்டுள்ளபடி ரூ. 1,200 கோடி மட்டுமின்றி, அதற்கும் அதிகமான அளவில் கடன் எழுப்பல், சேமித்தல் ஆகியவற்றின் மதிப்பீட்டை உயர்த்த முடியும் என்ற நம்பிக்கையையும் அளித்திருக்கிறதாம்.

இம்முறைகள் மேற்கொள்ளப்படுமானல், சர்க்காரின் மொத்தப் பற்றுக்குறை தொகையை ரூ. 750 கோடியாகக் குறைத்துக்கொள்ள முடியும் என்றும், இது அவ்வளவு பெரிய பற்றுக்குறை ஒன்றும் அல்ல எனவும், பற்றுக்குறைத் திட்டத்தில் காணப்பட்டுள்ள தொகையோ ரூ. 1,200 கோடி எனவும் கூறப்பட்டிருக்கிறது.

இதுதவிர, இந்தியா, அயல் நாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதை அறவே கைவிட்டுவிட்டு, ஆண்டு ஒன்றுக்கு ரூ. 20 கோடி வீதம் ஏற்றுமதி செய்துகொண்டே வந்தால், அந்தத் திட்டக்கால முடிவிற்குள்ளாகவே இதன் மூலம் ரூ. 200 கோடி வெளிநாட்டுச் செலாவணியை இந்தியா சம்பாதிக்கலாம்—அல்லது மீதம் பிடித்துக்கொள்ளலாம் என்றும் சில அதிகார வட்டாரங்கள் கருத்தறிவித்திருக்கின்றனவாம்.

இந்த இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்ற திட்ட வேலைகளுக்கான மொத்த மதிப்பீடு ரூ 5,600 கோடியாக இருந்தாலும், அந்த ஐந்தாண்டுக்கால இறுதியில் மொத்தம் உண்மையில் செலவாகக்கூடிய தொகை ரூ. 4,500 கோடியிலிருந்து 4,800 கோடிக்குள்ளாக வேதான் இருக்கும் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

மேலும் இந்தியா, ரூ. 200 கோடியைக் கடனுகப் பெற, உலக பாங்கியை அணுகும் என்றும், புதிதாக நிறுவப்பட்டுள்ள இந்த அகில உலக நிதிக் கார்ப்பொரேஷன் இந்தியாவிற்கு இந்த நிதி உதவி அளிக்கலாம் என நம்பப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

சேலம் :

23—9—56 மாலை 5 மணிக்கு செவ்வாய்ப்பேட்டை ராசேந்திர சத்திரத்திலிருந்து ஆயிரக் கணக்கான கழகத் தோழர்கள், பொது மக்களடங்கிய ஊர்வலம் புறப்பட்டு, மவுனமாகச் சென்று, கொமாரசாமிபட்டி கிளைக் கழகம் முன் வந்ததும், தோழர் எஸ். மெய்யப்பன் தலைமையில் அனுதாபக் கூட்டம் நடைபெற்றது. தோழர் ஈ. ஆர். கிருஷ்ணன் சொற்பொழிவாற்றினர், கூடியிருந்தோர் அனைவரும் 2 நிமிட நேரம் மவுனமாக இருந்துத் தங்கள் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டனர். பின்னர், அனுதாபத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

குளித்தலை :

குளித்தலை தி. மு. கழகத்தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்பட்டது. கிளைக் கழகச் சார்பில் தோழர் கே. வி. கே. சாமி அவர்களின் மறைவு குறித்தச் செய்தி துண்டு நோட்டீசுகள் மூலம் அச்சிடப்பட்டு நகர் மக்களுக்கு அறிவிக்கப்பட்டது.

எட்டயபுரம் (நெல்லை மாவட்டம்) :

21—9—56 இரவு 9 மணிக்கு தோழர் க. நடராசன் தலைமையில் கிளைக் கழக அவசரச் செயற்குழு கூட்டம் நடைபெற்றது. நகரில் உள்ள எல்லா கொடிகளும், கம்பத்தின் பாதியில் இறக்கிப் பறக்கவிடப்பட்டன. கூட்டத்தில் அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

குடியேற்றம் :

22—9—56 மாலை 4½ மணிக்கு, பிச்சனூர் பகுத்தறிவு இளைஞர் மன்றத்திலிருந்து மௌன ஊர்வலம் நடைபெற்றது. ஆற்றில், அனுதாபக் கூட்டம் நடைபெற்று அனுதாபத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

திருச்செங்கோடு :

22—9—56 பகல் 11 மணிக்கு தோழர் என். கே. வி. வேல் தலைமையில் மௌன ஊர்வலம் நடைபெற்று நாற்பது கால் மண்டபத்தை அடைந்தது. அனுதாபக் கூட்டத்திற்குத் தோழர் என். ஏ. நடேசன் தலைமை தாங்கினர். உலகப்பபாளையம், குமாரமங்கலம், சின்னத்தம்பி பாளையம், சட்டையம்புதூர் கிளைக் கழகங்கள் சார்பில் முறையே தோழர்கள் என். இராமசாமி, பி முனியப்பன், கி. கே. சபாபதி, கெட்டிமுத்து ஆகியோரும், திருச்செங்கோடு கிளையின் சார்பில் தோழர்கள் டி. ஏ. நடேசன், டி. எஸ். தங்கவேல், கே. வி. இராமசாமி, என். கே. பி. வேல் ஆகியோரும், புள்ளிக் கார் பில் தொழிற் சங்கச் சார்பில் தோழர் டி. ஆர். சண்முகமும் தங்கள் அனுதாபத்தைத் தெரிவித்துப் பேசினர். இறுதியில் அனுதாபத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

இலங்கை :

இலங்கை வாழ் திராவிட மக்களின் சார்பில், இலங்கை திராவிட முன்னேற்றக் கழகத் தலைமை நிலையம் தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது. அரசியல் காரணங்களுக்காகப் பொதுநலத் தொண்டர்களை இம்மாதிரி கொலை செய்தவர்களைக் கண்டுபிடித்துத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறது.

கடையநல்லூர் :

22-9-56 காலை கிளைக்கழக அவசரச் செயற்குழு நடைபெற்றது. அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, தூத்துக்குடி நகர தி. மு. கழகச் செயலாளருக்கு அனுதாபத் தந்தி கொடுக்கப்பட்டது. மாலை, மவுன ஊர்வலமும், மறுமலர்ச்சி திடலில் அனுதாபப் பொதுக்கூட்டமும் நடைபெற்றது. தோழர்கள் பலர் பேசினர். பொதுக்கூட்டத்திலும் அனுதாபத் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

தென் பகுதியில் கடற்படைத் தளம் அமையும்?

முடிவுகள் பற்றி அமைச்சர்

சென்னை, செப். 25—

“சேது சமுத்திரத் திட்டத்தைக் கவனிக்கையில் பாக் ஜலசந்தியில் கடற்படை தளமொன்று அமைப்பது சாத்தியமென்றே தெரியவருகிறது; ஆனால் அது, தற்போது வெறும் யோசனையாகவே இருக்கிறது; திட்டம் முழுமையிலும் பரிசீலனை செய்யப்படுகையில் இதுபற்றிய முடிவு நிர்ணயமாகும்” என்று, நிதி அமைச்சர் சுப்பிரமணியம் சட்ட சபையில் தெரிவித்துள்ளார்.

பஞ்சாலைத் தொழிலாளர்கள் ‘போனஸ்’ பிரச்சினை

முடிவு செய்ய நடுநிலையாளர் நியமிக்கப்படுவார்

கோவை, செப். 24—

இங்குள்ள ஆலை முதலாளிகளுக்கும் — தொழிலாளர் பிரதிநிதிகளுக்குமிடையே நடைபெற்றப் பேச்சுவார்த்தைகளின் விளைவாக, 1955—56ம் ஆண்டிற்குத் தொழிலாளருக்கான ‘போனஸ்’ பிரச்சினையை முடிவு செய்வதற்கு அரசாங்கம் ஒரு நடுநிலையாளரை நியமிக்க வேண்டுமென்று ஏகமனதாக ஒப்புக்கொள்ளப்பட்டது.

வெள்ளம் விளைவித்த நாசம்

பாட்னா, செப். 23—

மோதிஹாரி என்னும் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளத்தின் காரணமாக இலட்சத்திற்கு மேற்பட்டவர்கள் வீடிழந்து உயிர்தப்பி வாழ்கின்றனர்; ஆறுபேர் தண்ணீரில் மூழ்கி விட்டனர் என்று கூறப்படுகிறது. பல கிராமங்கள் மூழ்கி விட்டன. சம்பத்பூரில் பயிர்கள் எல்லாம் நாசமாகிவிட்டனவாம். படகு மூலம் மக்கள் நடமாடும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

பர்மாவில் நாகர் போராட்டத் தலைவர்?

ஷில்லாங், செப். 23—

சர்க்கார் துருப்புக்களின் கடும் நடவடிக்கை காரணமாக நாகர் போராட்டத்தலைவர் பிசோ, பர்மாவுக்குள் நுழையாதவாறு கவனித்துக்கொள்ளும்படி பர்மா சர்க்கார் தங்கள் போலீஸ் படையினருக்குத் தாக்கீது பிறப்பித்துள்ளதாகத் தெரிகிறது.

உணவு, தண்ணீர் போக்குவரத்துப் பாதைகளை நாகர் போராட்டக்காரர்கள் அடைத்துவிட்டபடியால், மலைப்பிரதேசத்தில் உள்ள 100 பேர் பட்டினியால் செத்துவிட்டதாகச் செய்தி ஒன்றில் கூறப்பட்டிருக்கிறது.

காலம் மாறுகிறது!

மொம்பாசா, செப். 24—

கென்யாவிலுள்ள கடற்கரைப் பகுதிகளில் உள்ள அராபியப் பெண்களுடன், இங்கு வந்துள்ள இளவரசி மார்கரெட், காபி அருந்தினாராம்.

இவ்விருந்து வைபவம், கென்யா அராபியத் தலைவர் வீட்டில் நடைபெற்றதாகவும், அவ்வீட்டினுள் வேறு எந்த ஆண் மகனும் அனுமதிக்கப்படவில்லை என்றும், அவ்வீட்டின் முன் பாதுகாப்புக்குக் கூடப் பெண்களாகவே நிறுத்தப்பட்டனர் என்றும் கூறப்படுகிறது.

இளவரசியாரை, அத்தலைவரின் மனைவியார் வரவேற்று விருந்தளித்துள்ளார்.

இளவரசி மார்கரெட்டுக்கு, ஒரு சிறிய வெள்ளி ‘வாள்’, மற்றும் சில விலையுயர்ந்த பொருட்கள் பரிசாகக் கொடுக்கப்பட்டனவாம்.

இந்தியப் புகையிலை 32 நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. இதன் மூலம் ஆண்டு தோறும் சுமார் ரூ. 12 கோடிக்கு வெளிநாட்டுச் செலாவணி கிடைத்து வருகிறது.

அரசாங்கத்திற்கு அதிகாரமில்லையாம்!

அரசியல் சட்டத்தை திருத்துவது அவசியமாஎன்பது பரிசீலனையாம்

சென்னை, செப். 25—

“அற நிலைய சட்டத்தின் 31-வது பிரிவுப்படி, கோயில்களின் உபரிப் பணத்தை எடுத்துக்கொள்ள அரசாங்கத்திற்கு அதிகாரமில்லை; சட்டப்படி ஒன்றும் செய்ய முடியாத நிலையிருக்கிறது; எனவே, கோயில்கள், மடங்கள் ஆகியவற்றின் உபரிப் பணத்தை கல்வி வளர்ச்சிக்காகவும், மற்ற நல்ல காரியங்களுக்காகவும் பயன்படுத்த இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்துவது அவசியமா என்பதை மத்திய அரசாங்கம் பரிசீலித்து வருகிறது,”

என்று, சட்டசபையில் கேள்வி நேரத்தின்போது அறநிலையப்பாதுகாப்பு அமைச்சர் பரமேசுவரன் தெரிவித்தார்.

கோரிக்கை எழுப்பினர் பதில் தருகின்றனர்!

சென்னை, செப். 25—

அரசாங்க மருத்துவ விடுதிகளில் பணியாற்றும் ஊழியர்களுக்குச் சம்பள விகிதங்களை உயர்த்தும் பிரச்சினையை, இதர அரசாங்க ஊழியர்களின் சம்பளம்—கிராக்கிப்படி விகிதங்களைத் திருத்தியமைக்கும்போது சேர்த்துப் பரிசீலிக்கலாம் என்று சர்க்கார் கருதுகின்றனராம்!

இந்தத் தகவலை அமைச்சர் ஷெட்டி சட்டசபையில் தெரிவித்துள்ளார்.

‘தண்டத் தீர்வை’ விதிக்கும் பிரச்சினை

சென்னை, செப். 25—

கீழ் பவானி பிரதேசத்தில் தண்டத் தீர்வை விதிக்கும் பிரச்சினையை அமைச்சர்கள் ஆலோசித்ததாகவும், அதுபற்றி விரைவிலேயே அரசாங்கத்தின் உத்தரவு பிறப்பிக்கப்படும் என்றும் நிலவரி அமைச்சர் மாணிக்கவேலர் கூறியுள்ளார்!

சட்டக் கல்லூரி மாணவர்களுக்குவிடுதி

அரசாங்கம் யோசித்து வருவதாக அமைச்சர் கூறுகிறார்!

சென்னை, செப். 25—

சென்னை நகரில் கல்வி பயிலும் மாணவிகளுக்காக அரசாங்க மாளிகையில் விடுதி ஒன்று கட்ட ரூ. 8,55,000 ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று, சென்னை சட்டசபையில் கேள்வி நேரத்தின்போது நிதி அமைச்சர் சுப்பிரமணியம் தெரிவித்தார்.

மேலும் சட்டக் கல்லூரி மாணவருக்கு விடுதி கட்டும் பிரச்சினையை யோசித்து வருவதாகவும் அமைச்சர் அறிவித்தார்.

★★★★★★★★★★-★-★★★★★★

தூத்துக்குடிக்கு அண்ணா

துணைப் பொதுச்செயலாளர்

என்.வி. நடராசன்

வருகை

★

அண்ணா அவர்கள் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்களுடன் 30—9—56 அன்று தூத்துக்குடிக்கு வருவதுடன் அன்று மாலை 6-மணிக்கு வ. உ. சி. திடலில் நடைபெறவிருக்கும் அனுதாபக் கூட்டத்திலும் கலந்து கொள்வார்கள்.

★-★★★★★★★★-★★★★★★★★

கழகக் கூட்டம்

★

பாண்டமங்கலம்:

28-9-56 மாலை 6-30 மணிக்கு

தலைவர்: அ. முருகேசன்

பேசுவோர்:

சி. மனோகரன்
வி. காளியப்பன்
வி. ஏ. இராமநாதன்
வீ. வணங்காமுடி

பிரதிநிதித்துவம் தர இயலாதாம்!

“அரசாங்க ஊழியர் வேலையில் இருந்துகொண்டே சட்டசபை உறுப்பினராக வேண்டுமானால் அரசியல் சட்டத்தையே திருத்தி அமைக்க வேண்டும்,” என்று, சென்னை சட்டசபைத் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

கெஜட் பதிவில்லாத அரசாங்க ஊழியர்களுக்கு சட்டசபையில் பிரதிநிதித்துவம் அளிப்பது அவசியமில்லை—விரும்பத்தக்கதுமில்லை என்று சென்னை அரசாங்கம் கருதுவதாக நிதி அமைச்சர் சட்டசபையில் கேள்வி நேரத்தின்போது கூறியுள்ளார்.

மேல்(சட்ட)சபையில் தங்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிப்பதற்கு சர்க்கார் வழிவகை செய்ய வேண்டுமென்று என். ஜி. ஓ-க்கள் சங்கம் கேட்டுக்கொண்டிருந்தது.

ஐந்து ஆண்டுகள் என்ன செய்தார்?

சென்னை, செப். 24—

1956—57ம் ஆண்டு அதிகப்படிச் செலவிற்காகச் சுமார் ரூ. 4¼ கோடிக்கு உப-மானிய கோரிக்கைகளை நிதி அமைச்சர் சுப்பிரமணியம் சட்டசபையில் கொண்டுவந்தார்.

‘5 ஆண்டுகளுக்குப்பின் அமைச்சர் உப-மானியக் கோரிக்கைகளைக் கொண்டு வருகிறார்; காலக்கிரமத்தில் சர்க்கார் அவற்றைக்கொண்டு வந்திருக்க வேண்டும்’ என்று சபைத் தலைவர் சுட்டிக்காட்டினார்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

கே. வி. கே. சாமி பிரிவு

செப்டம்பர் 30: அனுதாப நாள்

பொதுச்செயலாளர் வேண்டுகோள்

திராவிட முன்னேற்றக் கழகச் செயற்குழு உறுப்பினரும், நெல்லை மாவட்ட தி. மு. கழகச் செயலாளரும், பல்வேறு தொழிற்சங்கங்களின் தலைவரும், தூத்துக்குடி நகராண்மைக் கழக உறுப்பினருமான தோழர் கே. வி. கே. சாமி அவர்கள் படுகொலை செய்யப்பட்டு, நம்மைவிட்டுப் பிரிந்தமைக்கு அனுதாபம் தெரிவிக்கவும், நமது இறுதி வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளவும் செப். 30. ஞாயிறன்று நாடெங்கும் அனுதாபக் கூட்டங்களை நடத்துமாறு திராவிட முன்னேற்றக் கழகக் கிளைகளை வேண்டிக்கொள்கிறேன்.

‘அறிவகம்’
சென்னை-13
24—9—56

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

கே. வி. கே. சாமி படுகொலை

சென்னையில் 30-9-56 ஞாயிறன்று

அனுதாபக் கூட்டம் — ஊர்வலம்

★

மௌன ஊர்வலம்:

மாலை 3-மணிக்கு

நேப்பியர் பார்க்கிலிருந்து

பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

அவர்கள் தலைமையில் புறப்பட்டு, சிந்தாதரிப்பேட்டை ஈரோடு வழியாக ரிப்பன் பில்டிங்ஸ், சென்ட்ரல் ஸ்டேஷன், சுபாஷ் சந்திரபோஸ் ரோடு, பிராட்வே, மணிகார் சவுல்ட்ரி ரோடு, இராமானுசய்யர் தெரு, திருவொற்றியூர் ஈரோடு, சிமெட்ரி ரோடு வழியாகச் செல்லும்.

மு. கருணாநிதி, ஏ. வி. பி. ஆசைத்தம்பி

அணிவகுத்து வருவர்

★

மாலை 6-மணிக்கு

வண்ணை—கல்லறைத் திடலில் அனுதாபக் கூட்டம்

பொதுச்செயலாளர் அவர்களும், மற்றும் பல தோழர்களும் பேசுவர்

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

★★★★★★★★★★★★★★★★★★★★★★-★★★★★★★★★★

இலங்கையின் உள்விவகாரமாம்!

ஆகவே தலையிட இயலாதாம்!

சென்னை, செப். 24—

“இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் சென்னை மாநில சர்க்கார் எந்த வகையிலும் சட்டப்பூர்வமான முறையில் தலையிட முடியாது; இலங்கையில், மொழிப் பிரச்சினை குறித்து எழுந்துள்ள நிலைகளைச் சீர்தூக்கிப் பார்த்து முடிவு காண மத்திய சர்க்கார் கவனம் செலுத்தியே வருகின்றனர். அகில உலக அடிப்படையில் என்னென்ன நடவடிக்கைகளை இப்பிரச்சினை மீது எடுக்க முடியுமோ, அந்த நடவடிக்கைகளை எல்லாம் மத்திய சர்க்கார் மேற்கொண்டு வருகிறது,”

என்று, சென்னை மாநில நிதி அமைச்சர் சுப்பிரமணியம்சென்னை சட்டசபையில், இலங்கைத் தமிழர், மொழிப் பிரச்சினை குறித்துப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

இலங்கையில் மொழிப் பிரச்சினைமீது நடைபெற்று வரும் ஆர்ப்பாட்டங்கள், கிளர்ச்சிகளுக்குப் பக்கபலமாக, சென்னை சர்க்கார் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவு கொடுத்து வருவதாகக் கூறப்படுகிற எந்தவிதக் கடிதமும், அறிவிப்பும் தங்களுக்கு இலங்கை சர்க்காரிடமிருந்து கிடைக்கவில்லை என்றும், இந்தப் பிரச்சினையில் ஒரு சிலரிடையே கருத்து வேற்றுமைகளும், தவறான கருத்துக்களும் நிலவி வந்தாலும்கூட, இங்கு செய்யப்படுகிற துஷ்பிரச்சாரங்களைத் தடுக்க சர்க்கார் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், ஏனெனில் அத்தகைய பிரச்சாரங்கள் அனைத்தும் சட்ட வரம்பிற்குட்பட்ட பிரச்சாரங்களாகவே இருப்பதால் அவைகளை நிறுத்தச் செய்ய முடியாமல் போய்விடுகிறது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

‘இலங்கைத் தமிழர் பிரச்சினையினால் மனவேதனை அடைந்துள்ள தாய்த் தமிழக மக்களின் மனக் கசப்பைப் போக்க சர்க்கார், சட்டரீதியான வழிகளில் என்னென்ன நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்கின்றனர்?’ என்று புலவர் கிருஷ்ணன் என்ற உறுப்பினர் கேட்ட கேள்விக்கே அமைச்சர் மேற்கண்ட பதிலைத் தந்திருக்கிறார்.

அ. பொன்னம்பலனார்

சுற்றுப்பயணம்

30-9-56 துறையூர் வட்டம்—கொப்பம்பட்டி தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

1-10-56 முத்தையாபுரம்—தி. மு. கழகத் துவக்க விழாப் பொதுக்கூட்டம்

நியாய வார மசோதா

திருத்தங்களுடன் அக்டோபர் முதல் அமுலுக்கு வருமாம்

சென்னை, செப். 25—

புஞ்செய் நிலங்களுக்கும், தோட்டக்கால் நிலங்களுக்கும் நிலச் சொந்தக்காரருக்குச் சேரவேண்டிய நியாய வாரம், மகசூலில் மூன்றில் ஒரு பங்கு.

நெல் சாகுபடி செய்யும் நிலத்தில் சொந்தக்காரர் தனக்குரிய வாரத்தைத் தானியமாகவே பெற்றுக்கொள்ளலாம்.

இந்தத் திருத்தங்களுடன் நியாய வார மசோதா அக்டோபர் முதல் அமுலுக்கு வரும் என்று நிலவரி அமைச்சர் மாணிக்கவேலர் அறிவித்துள்ளார்.

விலையேற்றத்தைத் தடுக்கப்

புதிய நடவடிக்கை?

சென்னை, செப். 24—

அனாதை விடுதிகள், தங்கும் விடுதிகள், ஓட்டல்கள் ஆகியவைகளுக்கு மத்திய அரசாங்கக் கிடங்குகளிலிருந்து மொத்தமாகப் பச்சரிசி வழங்கப்படுமென்று அதிகாரபூர்வமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்திடம் போதிய பச்சரிசி கையிருப்பில் இருப்பதை மார்க்கெட்டில் குவித்து, விலை ஏற்றத்தைத் தடுக்கப்போவதாகக் கூறப்படுகிறது.

சில்லறை வியாபாரிகள் தடவைக்கு 30 மூட்டைகள் வாங்கலாம் என்பது 60 மூட்டைகளாக உயர்த்தப்பட்டுள்ளது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.